**செய்தி வெளியீடு எண்.361** **நாள்.20.5.2008**

**சாலை பாதுகாப்பு திட்டம்**

2008 – 2009 ஆம் ஆண்டிற்கான சாலை பாதுகாப்பு திட்டங்கள் நிர்வகிக்கும் பொருட்டு மத்திய கப்பல், சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின்கீழ் சிறப்பாக பணியாற்றும் அரசுசாரா நிறுவனங்களுக்கு உதவி மானியம் வழங்கும் பொருட்டு உயரி செயற்குறிப்புகள் (உரிய படிவத்தில்) வரவேற்கப்படுகிறது.

இதன் விவரங்கள் பின்வருமாறு:

1. மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் விண்ணப்பப் படிவம் மாவட்டத்திலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

   (i) சென்னை மாநகரத்திற்குட்பட்டவர்கள் இவ்விண்ணப்பத்தினை மாநகர காவல் ஆணையாளர் அலுவலகம், இணை போக்குவரத்து ஆணையர் அலுவலகம், சென்னை –23 மற்றும் சென்னை மாநகரத்திற்குட்பட்ட வட்டார போக்குவரத்து அலுவலகங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

2. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை மற்றும் சான்றிதழ்களுடன் அனுப்பப்பட வேண்டும்.

3. வழிகாட்டு நெறிமுறைகளை கவனமாக படித்து பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்கள் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை மற்றும் சான்றிதழ்களுடன் 23.05.2008க்குள் போக்குவரத்து ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். காலகெடுவிற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பப் படிவங்கள் போக்குவரத்து துறை ஆணையரால் பரிந்துரை செய்யப்பட மாட்டாது.

4. உதவி மானியம் வழங்குதல் தொடர்பான மத்திய அரசின் அறிக்கையும், விண்ணப்ப படிவங்களையும் http://www.tn.gov.in/sta என்ற இணையதளத்திலிருந்தும் தெரிந்துக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.